| 42 | FO | IM | 03 |
|---|---|---|---|

NDB bank

இல்லாதொழிக்கமுடியாத ஆவணக் கடனுக்கான விண்ணப்பம் ☐ தேவைப்படுத்தப்பட்ட கடன் பத்திரத்தின் வரைவு திகதி :

<table>
<tr><td colspan="3">நஷனல் டிவலப்மென்ட் பாங்க் பிஎல்சி<br>கம்பெனி பதிவு இல. PQ 27<br>வியாபார நிதித் துறை,<br>103ஏ, தர்மபால மாவத்தை, கொழும்பு 07.<br><br>…………………….. வங்கிக்கிளையினூடாக ஸ்விப்ட் மூலம் வழங்கப்பட்டது</td><td>கடன் பத்திரம் முடிவுறுதல்<br><br>மிகப்பிந்திய கப்பலேற்றுகை /அனுப்புகைத் திகதி</td><td>திகதி :<br>இடம் :<br><br>திகதி :</td></tr>
<tr><td colspan="3">விண்ணப்பதாரர்</td><td colspan="2">பயனுகரி</td></tr>
<tr><td colspan="3">நாணயம் மற்றும் தொகை</td><td colspan="2" rowspan="3">எந்த வங்கியினூடாக அறிவித்தல் அனுப்பப்படுமோ அந்த வங்கி (பெயர் முகவரி மற்றும் சுவிப்ட் குறியீடு)</td></tr>
<tr><td rowspan="2">கொடுப்பனவு நியதி</td><td colspan="2">☐ பார்வை ☐ வேறு கொடுப்பனவு நிபந்தனைகள் (கீழே குறிப்பிடவும்)</td></tr>
<tr><td colspan="2"></td></tr>
<tr><td rowspan="2">பகுதியளவிலான கப்பலேற்றுகைகள் /ஒப்படைப்புக்கள்<br>☐ அனுமதிக்கப்பட்டது<br>☐அனுமதிக்கப்படவில்லை</td><td colspan="2" rowspan="2">ஒரு கப்பலிலிருந்து மற்றுமொரு கப்பலுக்கு வழிமாற்றி ஏற்றுதல்<br>☐ அனுமதிக்கப்பட்டது<br>☐ அனுமதிக்கப்படவில்லை</td><td colspan="2">ஒப்படைப்பு நியதிகள்:<br>அனுமதிக்கப்பட்ட மாறுபாடு: %<br>(தொகை / பெறுமதி)</td></tr>
<tr><td colspan="2">இலங்கை, கொழும்புக்கு ஏற்றி அனுப்புவதற்கான……………. இலிருந்து /இல் கப்பலேற்றல் /அனுப்புகை</td></tr>
<tr><td colspan="5">பயனுகரியினால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்:<br>☑ மேலேயுள்ள கொடுப்பனவு நியதியின் கீழ் உம்மீது /உமது தொடர்பாளர் மீது வரையப்பட்ட வரைவுகள் (உறுதிப்படுத்தப்பட்டிருப்பின்).<br>☑ CFR/CIF/CIP/CPT விபரங்கள், இறக்குமதி உரிம இல……………. VAT பதிவு இல. ………………………… ஆகியவற்றைக் குறிப்பிட்டும் கப்பலேற்றுகை …………………… ஆந் திகதிய ……..………… ஆம் இலக்க ஆவணத்துடன் இசைந்தொழுகின்றது என சான்றுப்படுத்தியும் கையினால் கையொப்பமிடப்பட்ட வர்த்தக விலைப்பட்டிகளின் ஆங்கில மொழியிலான……………….. மூலப்பிரதிகள் மற்றும் ……………பிரதிகள்<br>☐ கடன் பத்திர இலக்கத்தைக் குறிப்பிட்டு விண்ணப்பதாரருக்கு (பெயர் மற்றும் முகவரி) அறிவிக்கும் நஷனல் டிவலப்மென்ட் பாங்க் பிஎல்சி இன் கட்டளைக்கு அனுப்பப்பட்ட</td></tr>
</table>

முழுமையான தூய கப்பற்தளத்திலான கடல்சார் ஏற்றுபொருட்பட்டியல்கள் தொகுதியின் …………………… மடங்கு மற்றும்…………………… கைமாற்றத்தகாத பிரதிகள்.

☐ கடன் பத்திர இலக்கத்தைக் குறிப்பிட்டு விண்ணப்பதாரருக்கு (பெயர் மற்றும் முகவரி) அறிவிக்கும் நஷனல் டிவலப்மென்ட் பாங்க் பிஎல்சி இன் கட்டளைக்கு அனுப்பப்பட்ட தூய வான்வழி பட்டியல் மற்றும் அதன்………… பிரதிகள்.

☐ கடன் பத்திர இலக்கத்தைக் குறிப்பிட்டு பயனுகரியின் பண்டகசாலையிலிருந்து விண்ணப்பதாரரின் பண்டகசாலைக்கு சிறந்த நன்னிலையில் பண்டங்கள் பெறப்பட்டதனை உறுதிப்படுத்தி பண்டங்கள் பெறப்பட்டமை பற்றிய குறிப்பு மற்றும் அதன்……………பிரதிகள்.

☐ நிறுவனஞ்சார் கப்பற்சரக்கு வாசகம் (A) நிறுவனஞ்சார் யுத்த வாசகம் (கப்பற்சரக்கு, நிறுவனஞ்சார் வேலைநிறுத்த வாசகம் (கப்பற்சரக்கு) ஆகியவற்றை காப்பீடுசெய்யும் விலைப்பட்டியலின் பெறுமதி மற்றும் கடன் பத்திர நாணயத்தில்……………… சதவீதத்துக்கு வெற்றாக புறக்குறிப்பிடப்பட்ட காப்புறுதிப் பத்திரம் /சான்றிதழ்

☐ …………………………… இனால் வழங்கப்பட்ட ………… ஆம் இலக்க திறந்த காப்பீட்டு இலக்கத்தின்கீழ் காப்புறுதி எம்மால் காப்பீடு செய்யப்படும் என்பதுடன் கப்பலேற்றுகையானது மேலேயுள்ள காப்புறுதிக் கம்பெனிக்கு எம்மால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது என உறுதிப்படுத்தப்படுகின்றது. காப்புறுதிப்பத்திரம் /சான்றிதழின் பிரதியொன்று இத்துடன் இணைக்கப்படுகின்றது.

☐ ………………… இனால் வழங்கப்படும் …………………… மூலச் சான்றிதழ்

☐ கடன்பத்திரத்தின்கீழ் கோரப்பட்ட எல்லா ஆவணங்களினதும் பிரதிகள் கப்பலேற்றுகை /அனுப்புகைத் திகதியிலிருந்து ……………… நாட்களினுள் விண்ணப்பதாரருக்கு அனுப்பப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டு பயனுகரியிடமிருந்து பெறப்படும் சான்றிதழ்.

☐ பொதியிடும் பட்டியலின் ……………. மூலப்பிரதிகள் மற்றும் ………… பிரதிகள்

வேறு ஆவணங்கள் /நியதிகள் (பின்னிணைப்பில் குறித்துரைக்கப்பட்டவாறு)

☐ ………………………………………………………………………………………

☐ ………………………………………………………………………………………

| | |
|---|---|
| பண்டங்கள் /சேவைகள் (மிகையான விபரங்கள் இன்றி சுருக்கமான விவரணம்) தேவைப்படின் பின்னிணைப்பில் குறித்துரைக்கவும். | HS குறியீட்டு இல. (இலக்கங்கள்) |

கப்பலேற்றல் ஆவணத்தை (ஆவணங்களை) வழங்கியதன் பின்னர் ……………… நாட்களினுள் (எதுவும் நிரப்பப்படாவிடின் 21 நாட்களினுள்) ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படுதல்

வேண்டும்.

மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள நியதிநிபந்தனைகளுக்கு நான் /நாம் உடன்படுகின்றேன் /உடன்படுகின்றோம் என்பதுடன் வெளியீட்டு இலக்கம் 600, பிரான்ஸ், பாரிஸ் சர்வதேச வணிகச் சபையின் ஆவணக் கடன்களுக்கான ஒருசீரான வழக்காறுகளும் செயல்முறைகளும், 2007 ஆம் பதிப்பிற்கு அமைய மேலே விபரமாகக் கூறப்பட்டவாறு உமது இல்லாதொழிக்கமுடியாத ஆவணக் கடனை வழங்குமாறு உம்மைக் கோருகின்றேன் /கோருகின்றோம்.

இக்கடன் பத்திரத்துடன் தொடர்பான உமது தரகுப்பணம் மற்றும் வேறு எல்லா விதிப்பனவுகளையும் எனது /எமது ………………… என்னும் கணக்கிலக்கத்திற்கு விளிம்புத்தொகையுடன்(margin) நீர் பற்று வைப்பதற்கு நான் /நாம் உமக்கு அதிகாரமளிக்கின்றேன் /அதிகாரமளிக்கின்றோம். உண்டியல்களைக் கொடுத்துத்தீர்ப்பதில் …………………………………… என்னும் கணக்கிலக்கத்துக்கு பற்றுவைப்பதற்கு நீர் அதிகாரமளிக்கப்படுகின்றீர் (முன்னைய கணக்கிலிருந்து வேறுபட்டதாக இருப்பின் மட்டும்)

☐ இவ்விறக்குமதி கொடுக்கல்வாங்கலை கொடுத்துத்தீர்ப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட வெளிநாட்டு நாணய நிதிகள் குறிப்பிட்ட பண்டங்களின் ஏற்றுமதியுடன் தொடர்புபடுகின்றது என நாம் உறுதிப்படுத்துகின்றோம்.

☐ இவ்விறக்குமதி கொடுக்கல் வாங்கலை கொடுத்துத்தீர்ப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட வெளிநாட்டு நாணய நிதிகள் குறிப்பிட்ட பண்டங்களின் ஏற்றுமதியுடன் தொடர்புபடவில்லை என நாம் உறுதிப்படுத்துகின்றோம்.

| | |
|---|---|
| ☐ எமது கணக்கின் மீதான எல்லா விதிப்பனவுகளும்<br>☐ பயனுகரியின் கணக்கின்மீதான எல்லா விதிப்பனவுகளும்<br>☐ வழங்கும் வங்கிக்குப் புறம்பான எல்லா விதிப்பனவுகளும் பயனுகரியின் கணக்குகளுக்காகும் | தங்கள் விசுவாசமுள்ள,<br><br>……………………<br>(கையொப்பம் /கையொப்பங்கள் மற்றும் கம்பெனி இலச்சினை) |
| ☐ உறுதிப்படுத்தப்பட்டது ☐ உமது தொடர்பாளரினால் உறுதிப்படுத்தப்படவில்லை<br>☐ உறுதிப்படுத்தல் விதிப்பனவுகள் ☐ எமது கணக்குக்கு ☐ பயனுகரியின் கணக்குக்கு சேர்க்கப்படலாம். | |

முகாமையாளர்,
நஷனல் டிவலப்பெமன்ட் பாங்க் பிஎல்சி
ஆவணக் கடன் துறை
40, நவம் மாவத்தை
கொழும்பு 02.

மறுபுறத்தில் குறிப்பிடப்பட்ட விபரங்களின் படி இல்லாதொழிக்கமுடியாத ஆவணக்கடன் ஒன்றை எனது / எமது கோரிக்கையின்பேரில் நீர் திறந்ததனை அல்லது நிறுவியதனைக் கருத்திற்கொண்டு, பின்வரும் நியதிகள், நிபந்தனைகள் மற்றும் பொறுப்பு ஏற்புடையனவாதல் வேண்டும் என நான் / நாம் இத்தால் உடன்படுகின்றேன் / உடன்படுகின்றோம்:-

ஒன்றில் கப்பலேற்றுகைக்கு முன்னர் அல்லது கடல்மார்க்கமாக அல்லது தரைமார்க்கமாக அல்லது வான்வழியாக வணிகப்பொருட்கள் கொண்டுசெல்லப்படும்போது அல்லது அவை வந்தடைந்ததன் பின்னர் அல்லது அவற்றைக் காப்புறுதி செய்யாமை அல்லது அவற்றின் முறையற்ற அல்லது போதியதல்லாத காப்புறுதியின் காரணமாக வணிகப்பொருட்களுக்கு (அச்சொல்லமைப்பு இதன்கண் எங்கெல்லாம் பயன்படுத்தப்படுகின்றதோ அங்கெல்லாம் கப்பலேற்றப்பட்ட வணிகப்பொருட்கள் மற்றும் ஆவணங்கள் குறிப்பிடுகின்ற வணிகப்பொருட்கள் மற்றும் ஆவணங்கள் பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கொள்ளப்படுகின்ற வணிகப்பொருட்கள் எனப் பொருள்படும் என்பதுடன் அவற்றை உள்ளடக்குதலும் வேண்டும்) ஏற்படக்கூடிய ஏதேனும் இழப்பு அல்லது சேதத்துக்கு அல்லது கப்பலேற்றுபவரினால் அல்லது எத்தகையவருமான வேறு எவரேனும் ஆளினால் நிறுத்தி வைக்கப்படுகின்ற அல்லது தடுத்துவைக்கப்படுகின்ற வணிகப் பொருட்களின் விவரணம், தொகை, தரம், எடை, நிலைமை, ஒப்படைப்பு அல்லது பெறுமதியில் உள்ள ஏதேனும் குறைபாட்டுக்கு அல்லது அதன் விவரணம், தொகை, தரம், எடை, ஒப்படைப்பு நிபந்தனை அல்லது பெறுமதியின் ஏதேனும் பிறழ் பிரதிநிதித்துவத்திற்கு அல்லது அவற்றின் மீதான கப்பலேற்றுநர்களின் விதிப்பனவுகளுக்கு அல்லது கப்பலேற்றப்பட்ட வணிகப் பொருட்கள் மற்றும் கையளிக்கப்பட்ட ஆவணங்களில் குறிப்பிடப்பட்ட அல்லது அவற்றினை பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கொள்ளப்பட்ட வணிகப்பொருட்களுக்குமிடையில் உள்ள ஏதேனும் ஒவ்வாமைக்காக அல்லது குறைபாட்டுக்காக அல்லது கையளிக்கப்பட்ட ஆவணங்களின் செல்லுபடியான தன்மை, போதிய தன்மை, உண்மைத் தன்மை அல்லது கிரமமான தன்மைக்கு (அவை எல்லாவற்றிற்கும் நான் / நாம் உத்தரவாதமளிக்கின்றேன் / உத்தரவாதமளிக்கின்றோம்.) நீர் அல்லது உமது வங்கிக்கிளைகள், முகவர்கள் அல்லது தொடர்பாளர்கள் பொறுப்பாதலாகாது என்பதுடன் கடன்பத்திரம் பற்றிய அறிவித்தல் மற்றும் கடன்பத்திரத்தின் கீழான அல்லது இதன்கீழான அறிவுறுத்தல்களை அனுப்புதல் மற்றும் ஆவணங்களை அனுப்புதல் முழுமையாக எனது / எமது ஆபத்திலும் செலவிலும் இருக்கும் என நான் / நாம் மேலும் உடன்படுகின்றேன் / உடன்படுகின்றோம்.

நான் / நாம் எல்லா கப்பற்கேள்வு மற்றும் இறக்குதல் விதிப்பனவுகளை உரியமுறையில் செலுத்துவேன் எனவும் மேலே குறிப்பிடப்பட்ட காப்புறுதி காலவதியான பின்னர் தீ மற்றும் வேறு எல்லா ஆபத்துக்களுக்கும் எதிராக உம்மை, உமது வங்கிக்கிளைகளை, முகவர்களை மற்றும் தொடர்பாளர்களை காப்பீடு செய்யப்பட்டதாக மேலும் வைத்திருப்பேன் எனவும் இழப்பின் விடயத்தில் காப்புறுதிப்பத்திரம் அல்லது சான்றிதழின் கீழ் வருமதியாகவுள்ள தொகையை சேகரித்து அவ்வருமதிகளை உமக்கு செலுத்துவேன் எனவும் கொடுப்பனவு செய்யப்படும்வரை உமக்கும் உமது சார்பாகவும் நம்பிக்கைப் பொறுப்பாளராக அதனை வைத்திருப்பேன் எனவும் உடன்படுகின்றேன்.

ஏற்று பொருட்பட்டியல்கள் அல்லது அவற்றின் வரும்படிகள் அல்லது, வணிகப்பொருட்களை கையுதிர்த்தல் சம்பந்தமாக நீர் மற்றும் உமது வங்கிக்கிளைகள், முகவர்கள் மற்றும் தொடர்பாளர்கள் கடன்பத்திரத்தின்கீழ் பேச்சுவார்த்தை மூலம் பெறப்பட்ட ஏதேனும் வரைவை வரைந்தவர் அத்துடன் / அல்லது புறக்குறிப்பிடுநர்களுடன் நீர் அல்லது அவர்கள் முறையானது எனக் கருதுகின்றவாறான அத்தகைய ஒழுங்கேற்பாடுகளைச் செய்யலாம் என்பதுடன் வரைவுகளை பேச்சுவார்த்தை மூலம் பெறும்போது அல்லது வேறுவகையாக கடன்பத்திரத்தின்கீழ் அல்லது இதன்கீழ் உம்மால் அல்லது உமது வங்கிக்கிளைகளினால், முகவர்களினால் அல்லது தொடர்பாளர்களினால் செலுத்தீடு செய்யப்பட்ட அல்லது செலுத்தப்பட்ட எவையேனும் தொகைகளை, வட்டியை, தரகுப்பணத்தை மற்றும் எல்லா விதிப்பனவுகளையும் உமக்கு மீளளிப்பதற்கு நான் / நாம் பொறுப்பேற்கின்றேன் / பொறுப்பேற்கின்றோம் அத்துடன் எல்லா வணிகப்பொருட்கள் மற்றும் அவற்றின் வரும்படிகள் மீது, அத்தகைய எல்லாத் தொகைகள், வட்டி, தரகுப்பணம் மற்றும் விதிப்பனவுகளை காப்பீடு செய்வதற்கு போதியதாகவுள்ள தொகைக்கான எல்லாக் காப்புறுதிப் பத்திரங்கள் அல்லது பணங்கள் மீது மற்றும் உமக்கு அல்லது உமது வங்கிக் கிளைகளுக்கு, முகவர்களுக்கு, தொடர்பாளர்களுக்கு கையளிக்கப்பட்ட எல்லா ஏற்றுபொருட்பட்டியல்களின் மீது இத்தால் சோந்தையில் குறிப்பிட்ட விதிப்பனவுக்கான உரிமைக்கோரிக்கையை வழங்குவதற்கு எனது / எமது கோரிக்கையின் மீது அல்லது எனக்கான / எமக்கான அறிவித்தலின்றி எந்நேரத்திலும் தனது தற்றுணிபில் அதனை உமது பிணைப்பொறுப்புக்காக அல்லது உமக்கு மீளளிப்பதற்காக வைத்திருப்பதற்கு, உடைமையில் எடுப்பதற்கு, விற்பனை செய்வதற்கு மற்றும் கையுதிர்ப்பதற்கு அத்துடன் விற்பனைக்கான தரகுப்பணம், சட்ட விதிப்பனவுகள் மற்றும் உமது கணக்குக்கான வேறு செலுத்தீடுகள் உட்பட எல்லா செலவுகளையும் அத்துடன் / அல்லது பற்றாக்குறைகளையும் என்னிடம் / எம்மிடம் விதிப்பனவு செய்வதற்கு முழுத்தத்துவமும் அதிகாரமும் உண்டு எனவும் கோரிக்கையின் மீது செலுத்துவதற்கு நான் / நாம் இத்தால் பொறுப்பேற்கின்ற ஏதேனும் பற்றாக்குறைத் தொகை எனக்கு / எமக்கு எதிரான முடிபான சான்றாதல் வேண்டும்.

பகுதியளவிலான கப்பலேற்றுகைகள் தொடர்பில் உண்மையாக கப்பலேற்றப்பட்ட பண்டங்களுக்கான வரைவின் முறையான விகிதாசாரத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பகுதியளவிலான கப்பலேற்றுகைகளை காப்பீடுசெய்கின்ற ஆவணங்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட வரைவுகளுக்கு நீரோ அல்லது உமது வங்கிக் கிளைகளோ, முகவர்களோ, தொடர்பாளர்களோ பொறுப்பாகமாட்டார்கள்.

கப்பலேற்றல் ஆவணங்கள் எல்லாவற்றினதும் அல்லது பகுதியளவிலான ஏதேனும் தாமதம், இழப்பு அல்லது வந்தடையாமைக்கு நீர் பொறுப்பாதலாகாது.

இக்கடன் பத்திரம் என்னால் / எம்மால் இல்லாதொழிக்கமுடியாதது என்பதுடன் உமது வங்கியின் எழுத்திலான வெளிப்படையான சம்மதத்துடன் தவிர எவ்வகையயிலும் மாற்றப்பட முடியாது.

வரைவுகளைப் பேச்சுவார்த்தைமூலம் பெறும்போது அல்லது வேறு வகையான உம்மால் அல்லது உமது வங்கிக் கிளைகளால், முகவர்களால் மற்றும் தொடர்பாளர்களால் கடன்பத்திரத்தின் கீழ் உண்மையாக செலுத்தீடு செய்யப்பட்ட அல்லது செலுத்தப்பட்ட தொகைகளுக்கு அப்பால் அதன்கீழான ஏதேனும் பொறுப்பை உறுவதற்கு நீர் அல்லது உமது வங்கிக் கிளைகள், முகவர்கள் அல்லது தொடர்பாளர்கள் கோரப்படுதலாகாது என்பதுடன் கடன்பத்திரத்தின்கீழ் அல்லது அது தொடர்பாக அல்லது இதன்கீழ் அல்லது இது தொடர்பாக உறப்படக்கூடிய எல்லாச் செலவுதொகைகள், விதிப்பனவுகள் மற்றும் செலவுகளின் பொறுப்புக்கு எதிராக உமக்கும் உமது வங்கிக் கிளைகளுக்கும், முகவர்களுக்கும் மற்றும் தொடர்பாளர்களுக்கும் நான் / நாம் நட்டோத்தரவாதமளிக்கின்றேன் / நட்டோத்தரவாதமளிக்கின்றோம். தீங்கேற்படாது வைத்திருக்கின்றேன் / வைத்திருக்கின்றோம். கம்பி வழியாக கடன்பத்திரம் திறக்கப்படின், தந்திகள் / தொலை அச்சுகள் அல்லது தொலைநகல் செய்திகள் எனது / எமது ஆபத்து மற்றும் செலவில் அனுப்பப்படுகின்றன எனவும் அவற்றை அனுப்பும்போது எழக்கூடிய எவையேனும் தவறுகள் அல்லது விட்டுவிடுகைகளுக்கு அல்லது சம்பந்தப்பட்ட கம்பி அல்லது தந்திக் கம்பெனிகளின் பக்கத்திலான தாமதத்துக்கு நீர் மற்றும் உமது வங்கிக் கிளைகள், முகவர்கள் மற்றும் தொடர்பாளர்கள் பொறுப்பாகமாட்டார்கள் என விளங்கிக்கொள்ளப்படுகின்றது.

இதன்கீழான அல்லது கடன்பத்திரத்தின்கீழ் எழுகின்ற எல்லாக் கடப்பாடுகளும் தொடர்ந்து வலுவிலிருத்தல் வேண்டும் என்பதுடன் உமது வங்கியின் அல்லது வங்கியினாலான ஏதேனும் உள்ளீர்ப்பு அதன் அல்லது அதனுடனான ஏதேனும் ஒன்றிணைப்பு மூலம் அல்லது எனது / எமது பெயர் மகுடம் அத்துடன் / அல்லது அமைப்பிலான அல்லது எந்த வியாபாரம் அத்துடன் / அல்லது ஒப்பந்தம் அல்லது ஒப்பந்தங்களுக்கு அல்லது அவை தொடர்பில் அல்லது அவை சம்பந்தமாக கடன்பத்திரம் பெறப்பட்டுள்ளதோ அல்லது

திறக்கப்பட்டுள்ளதோ அந்த வியாபாரத்தின் அத்துடன் / அல்லது ஒப்பந்தத்தின் அல்லது ஒப்பந்தங்களின் முழுமையின் அல்லது பகுதியின் பயனுகரியின் பெயர் மகுடம் அத்துடன் / அல்லது அமைப்பிலான ஏதேனும் மாற்றத்தினால் தீர்மானிக்கப்படுதலாகாது அல்லது எவ்வகையிலும் பங்கமாக இருத்தலாகாது, ஆனால் அக்கடப்பாடுகள் உள்ளீர்க்கின்ற அல்லது ஒன்றிணைக்கப்பட்ட கம்பெனி அல்லது வணிக நிறுவனத்துக்காகவும் அவற்றினாலும் எல்லா உளக்கருத்துக்களுக்காகவும் நோக்கங்களுக்காகவும் ஏதேனும் விளைவாக வரும் அல்லது கொள்வனவு செய்யும் குழுமம், கம்பெனி அல்லது வணிக நிறுவனம் அல்லது அத்தகைய கைமாற்றல் செய்யப்பட்டுள்ள குழுமம் கம்பெனி அல்லது வணிக நிறுவனத்திற்கும் விடயத்துக்கேற்ப கோருகின்ற திறத்தவர் அல்லது பயனுகரியாக இருந்த ஒருவராக இருந்துள்ளார் என உறுதிப்படுத்துதல் வேண்டும் என்பதுடன் அவற்றுக்கு கிடைக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்

வரைவை பேச்சுவார்த்தை மூலம் பெறுவதில் அல்லது வேறுவகையாக கடன் பத்திரத்தின்கீழ் அல்லது இதன்கீழ் உம்மால் அல்லது உமது வங்கிக் கிளைகளினால், முகவர்களினால் அல்லது தொடர்பாளர்களினால் செலுத்தீடு செய்யப்பட்ட அல்லது செலத்தப்பட்ட எல்லாத் தொகைகளையும் உமது தரகுப்பணம் மற்றும் விதிப்பனவுகளுடன் எனது / எமது கணக்குக்கு பற்றுவைப்பதற்கு நீர் அதிகாரமளிக்கப்படுகின்றீர்.

கடன்பத்திரத்தின்கீழ் பேச்சுவார்த்தை மூலம் பெறப்பட்ட வரைவுகளை முன்வைப்பின் மீது நான் / நாம் உரியமுறையில் ஏற்றுக்கொள்கின்றேன் / ஏற்றுக்கொள்கின்றோம் என்பதுடன் முதிர்வின்போது அவற்றைச் செலுத்துவேன் /செலுத்துவோம்.

இதன்கீழான உமது வங்கியின் உரிமை கடன் பத்திரத்தின்கீழ் அத்துடன் / அல்லது உமது சார்பாக என்னால் / எம்மால் ஏற்கனவே கையொப்பமிடப்பட்ட அல்லது இதனகத்துப்பின்னர் கையொப்பமிடப்படக்கூடிய ஏதேனும் அடைமானக் கடிதத்தின் கீழான ஏதேனும் கொடுக்கல்வாங்கலின் சூழ்நிலைகளினால் உருவாக்கப்பட்ட உமது வங்கியின் உரிமைக்கு மேலதிகமாகவும் அதனை பாதிக்காமலும் அல்லது குறைக்காமலும் இருத்தல் வேண்டும்.

உம்மால் அல்லது உமது ஏதேனும் வங்கிக் கிளையால் அல்லது அலுவலகத்தால் அல்லது எவரேனும் முகவரால் அல்லது தொடர்பாளரால் அல்லது பேச்சுவார்த்தை மூலம் பெறும் வங்கியால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட அல்லது செய்யாது விட்டுவிடப்பட்ட ஏதேனும் செயல், செயற்பாடு, கருமம் அல்லது காரியம் உமக்கு எதிராக முரணாக வெளிப்படையாக எண்பிக்கப்பட்டாலொழியவும் எண்பிக்கப்படும் வரையிலும் பகுதியளவில் ஒன்றுடனும் பகுதியளவில் மற்றதுடனும் ஒன்றில் இதன் நியதி நிபந்தனைகளின்கீழ் அல்லது அவற்றுக்கு இணங்க மற்றும் தற்போது அல்லது ஆவணங்களைப் பேச்சுவார்த்தை மூலம் பெறும் நேரத்தில் வலுவிலுள்ள ஆவணக் கடனுக்கான ஒருசீரான வழங்காறுகள் மற்றும் செயல்முறையின் நியதிகள் மற்றும் ஏற்பாடுகளின் கீழ் அல்லது அவற்றுக்கு இணங்க அல்லது பேச்சுவார்த்தை மூலம் பெறும்

இடத்தில் அல்லது கப்பலேற்றும் இடத்தில் வலுவிலுள்ள சட்டங்கள் அல்லது ஒழுங்குவிதிகள் அல்லது வழக்காறுகள் அல்லது பயன்பாடு அல்லது செயன்முறையின் கீழ் அல்லது அவற்றுக்கு இணங்க செய்யப்பட்டதாக அல்லது செய்யாது விடப்பட்டதாக அல்லது சட்டமுறையாகவும் உரியமுறையிலும் முறையாகவும் செய்யப்பட்டதாக அல்லது செய்யாதுவிடப்பட்டதாக கருதப்படுதலும் ஊகம் கொள்ளப்படுதலும் வேண்டும். ஆவணக் கடனுக்கான ஒருசீரான வழக்காறுகள் மற்றும் செயல்முறையின் பிரதியொன்றாக கொள்ளப்படுகின்றதும் சர்வதேச வணிக நிறுவனத்தின் தலைவர் அல்லது தவிசாளர் அல்லது செயலாளர் அல்லது வேறு எவரேனும் அலுவலரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு மெய்யென உறுதிப்படுத்தப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் ஆவணத்தின் நியதிகளினால் பிணிக்கப்படுவதற்கு நான் / நாம் உடன்படுகின்றேன் / உடன்படுகின்றோம் என்பதுடன் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும் அத்தகைய பிரதி எனக்கு / எமக்கு எதிராக சான்றில் ஏல்தகவுடையதாக்கப்படுதல் வேண்டும் எனவும் உடன்படுகின்றேன் / உடன்படுகின்றோம்.

வங்கியானது, எனது / எமது முன்னங்கீகாரத்தைப் பெறாமல் இதன்கீழான அதன் எவையேனும் உரிமைகளை அல்லது எல்லாவற்றையும் வேறொரு திறத்தவருக்கு குறித்தளிப்பதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும் என இத்தால் நான் / நாம் ஒப்புக்கொள்கின்றேன் / ஒப்புக்கொள்கின்றோம்.

திகதி

தங்கள் விசுவாசமுள்ள

விண்ணப்பதாரரின் பெயர்
முகவரி ………………………………
…………………………………………
…………………………………………

…………………………………..
(கையொப்பம் / கையொப்பங்கள்
மற்றும் கம்பெனி இலச்சினை)

இவ்வாவணத்தின் கீழ் நஷனல் டிவலப்மெண்ட் பாங்க் பிஎல்சி மற்றும் அதன் அடுத்துறுநர்கள் மற்றும் சாட்டுநர்களை நோக்கிய எல்லாக் கடப்பாடுகளையும் திருவாளர்கள்……………………………………… இனால் உரியமுறையில் நிறைவேற்றுவதற்கு நாம் முதல்வர்கள் என்றாற்போன்று இத்தால் நாம் உத்தரவாதமளிக்கின்றோம்.

பீ 2 (கடன்பத்திர விண்ணப்பம்)